பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

22 06 2025 6 45

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதன் மூலம் முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்த முடியும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

2. உலகெங்கிலும் உள்ள முருக பக்தர்களை ஒருங்கிணைக்கும் வகையில் முருக பக்தர்கள் மாநாடு மதுரையில் இன்று நடைபெறுகிது.

3. மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. தரமான மருத்துவ சேவையை வழங்கும் வகையில் அதற்கான கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக மாநில அரசு கூறியுள்ளது.

5. ஆசிய ஜூனியர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா மேலும் 5 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

முருக பக்தர்கள் மாநாடு இன்று மதுரையில் நடைபெறுகிது.

உலகம் முழுவதிலுமிருந்து முருக பக்தர்களை ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டு இந்த மாநாடு நடத்தப்படுகிறது.

இந்த மாநாட்டில் தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, பிஜேபி தலைவர் திரு. நயினார் நாகேந்திரன், ஆந்திரப்பிரதேச துணை முதலமைசச்சர் திரு.

பவன் கல்யாண், புதுச்சேரி திரு. கைலாஷ்நாதன் உள்ளிட்ட பலர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்கின்றனர்.

இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக மதுரை பாண்டிகோயில் சாலையில் உள்ள மாநாட்டுத் திடலில் அறுபடை முருகன் கோவிலின் மாதிரிகள் கண்காட்சிகளாக அமைக்கப்பட்டுள்ளன.

இதனிடையே மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், மாலை 6 மணிக்கு ஒரே நேரத்தில் லட்சக்கணக்கான பக்தர்கள் ஒன்றிணைந்து கந்தசஷ்டி கவசத்தைப் பாடி கின்னஸ் சாதனை படைக்கப்பட உள்ளதாக தெரிவித்தார்.

**(Voiec Byte – Murugan – 31 Sec)**

தமிழகத்தின் கலாச்சார தொண்மையையும், பண்பாடு மற்றும் புராதன அடையாளங்களான ஆலயங்களையும் மீட்டெடுக்கும் வகையில் இந்த மாநாடு அமைந்துள்ளதாக அவர் கூறினார்.

மலேசியா, இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகள் மற்றம் மாநிலங்களில் இருந்து 5 லட்சத்துக்கும் அதிகமானோர் இந்த மாநாட்டில் பங்கேற்பார்கள் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<>>>>**

தீவிரவாத செயல்களை ஒருபோதும் சகித்துக்கொள்ள முடியாது என்பதே மத்திய அரசின் நிலைப்பாடாக உள்ளது என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், கஷ்மீர் நக்சல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் வேரறுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுடனான இண்டஸ் நதிநீர் ஒப்பந்தத்தை புதுப்பிக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை என்று அவர் உறுதிபடத் தெரிவித்தார்.

இண்டஸ் நதிகளில் உள்ள உபரிநீரை ராஜஸ்தான் மாநிலத்திற்கு கொண்டு செல்லும் வகையில் வாய்க்கால்கள் கட்டப்படும் என்று அவர் கூறினார்.

இந்தியா பாதுகாப்பான நாடாக இருப்பதை உறுதி செய்வதன் மூலம் முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்த முடியும் என்று அவர் கூறினார்.

மத்திய அரசின் வெளிப்படையான கொள்கைகள் உலகளவில் மாபெரும் நுகர்வோர் சந்தையாக இந்தியாவை உருவெடுக்கச் செய்துள்ளதாக அவர் கூறினார்.

உலக அளவில் சக்திவாய்ந்த பொருளாதார நாடாக இந்தியாவை நிலைநிறுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

வங்கித் துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சீர்திருத்த நடவடிக்கைகள், ஏழை மக்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக உள்ளது என்று திரு. அமித் ஷா தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டில் உள்ள அனைத்து தரப்பு மக்களின் மேம்பாட்டை உறுதி செய்யும் வகையில் மத்திய அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

நாக்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், முந்தைய அரசுகள் கடந்த 60 ஆண்டுகளில் நிறைவேற்றாத திட்டங்களை பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு 11 ஆண்டுகளில் செய்து முடித்துள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தொழில்துறையினருக்கு உதவிடும் வகையில் மத்திய அரசின் கொள்கைகள் அமைந்துள்ளதாக அவர் கூறினார்.

ஏற்றுமதி அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளில் தொடர்ந்து கவனம் செலுத்தப்படும் என்றும், சரக்குப் போக்குவரத்திற்கான செலவுகள் இந்த ஆண்டு இறுதிக்குள் 9 சதவீதம் வரை குறையும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

நாட்டின் முன்னேற்றத்தில் பெண்களின் பங்களிப்பை உறுதி செய்யும் வகையில் 33 சதவீத இடஒதுக்கீடு சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதையும் திரு. நிதின் கட்கரி சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகள் அனைத்தும் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்று தெரிவித்தார்.

சமூக நீதியை உறுதி செய்யும் வகையில் உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகள் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்படுவார்கள் என்று அவர் கூறினார்.

சமூகநீதி, சமத்துவம், சமதர்மம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

சென்னையில் உள்ள வள்ளுவர் கோட்டம் 80 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் கூறினார்.

<<<<>>>>

யோகா மற்றும் இயற்கை மருத்துவத்திற்கு மாநில அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டிலேயே சித்தா, யோகா, ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி போன்ற பாரம்பரிய இந்திய மருத்துவ முறைகள் தமிழகத்தில் மட்டுமே பயன்பாட்டில் இருப்பதாக தெரிவித்தார்.

அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரிகள் இரண்டுடன் சேர்த்து மொத்தம் 19 கல்லூரிகள் தமிழ்நாட்டில் உள்ளதாக அவர் கூறினார்.

தமிழகத்தில் மருத்துவ கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

38 மாவட்டங்களில் உள்ள 100 அரசு மருத்துவமனைகளில் 7 கோடி ரூபாய் செலவில் இயற்கை மருத்துவ நலவாழ்வு மையங்களை அமைப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை திரு. மா. சுப்பிரமணியன் சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஆபரேஷன் சிந்து மூலம் ஈரானில் உள்ள இலங்கை நாட்டடினரை திரும்ப அழைத்துவருவதற்காக மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு அந்நாட்டு இலங்கை அரசு நன்றி தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பிரேசிலில் ராட்சத பலூர் வெடித்து ஏற்பட்ட விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர்.

<<<<>>>>

நைஜீரியாவல் வடகிழக்கு **Borno** மாகாணத்தில் உள்ள மீன் சந்தையில் நடத்தப்பட்ட தற்கொலைப் படைத் தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டனர்.

<<<<>>>>

வான்வெளியில் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசல் காரணமாக 168 பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த இண்டிகோ விமானம் பெங்களூருவில் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

<<<<>>>>

ஹரியானா மாநிலம் குருஷேத்ராவில் பிரதமரின் விரைவு சக்தி தேசிய பெருந்திட்டத்தின்கீழ் சரக்குப் போக்குவரத்திற்கான முனையத்தை அம்மாநில முதலமைச்சர் திரு. நயாப்சிங் சைனி தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

உத்தராகண்ட் மாநிலத்தில் யோகா மற்றும் தியான பயிற்சி மையங்களை மேம்படுத்தும் வகையில் 20 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும் என்று அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

கன்னியாகுமரி மாவடத்தில் வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் ஆட்சியர் திருமதி. அழகுமீனா தலைமையில் நடைபெற்றது.

<<<<>>>>

கேரளா, கர்நாடகா மாநிலங்களுக்கு கடத்தப்படவிருந்த சுமார் ஒருகோடி ரூபாய் மதிப்பிலான ரேஷன் அரிசி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

கிருஷ்ணகிரியில் அகில இந்திய மாங்கனி கண்காட்சி நேற்று தொடங்கியது.

<<<<>>>>

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் நீர்நிலைகள் தூர்வாரும் பணிகளை ஆட்சியர் திருமதி அருணா ஆய்வு செய்தார்.

<<<<>>>>

தென்காசி மாவட்டம் குற்றாலம் ஐந்தருவி செல்லும் சாலையில் 7 அடி நீளமுள்ள மலைப்பாம்பை தீயணைப்புத்துறையினர் பிடித்து வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய ஜூனியர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா மேலும் 5 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளது.

வியட்நாமில் நடைபெற்ற இப்போட்டியில் ஆடவர் 61 கிலோ எடைப்பிரிவில் நிகிலும், 65 கிலோ எடைப்பிரிவில் சுஜித்தும், 74 கிலோ எடைப்பிரிவில் ஜெய்தீப்பும், 79 கிலோ எடைப்பிரிவில் சந்தர் மோகனும், 92 கிலோ எடைப்பிரிவில் சச்சினும் இப்பதக்கங்களை வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா 11 தங்கம், 6 வெள்ளி மற்றும் 3 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

<<<<>>>>

ஆசிய ஸ்நூக்கர் சாம்பியன் போட்டி இன்று கொழும்பில் தொடங்குகிறது.

இப்போட்டியில் இந்தியாவின் பங்கஜ் அத்வானி, பராஸ் குப்தா, புஷ்பேந்தர் சிங் உள்ளிட்ட வீரர்கள் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

ப்ரோ லீக் ஹாக்கிப் போட்டியில் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவு ஆட்டங்களில் இந்தியா இன்று பெல்ஜியம் அணியை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

பெர்லினில் நடைபெற்று வரும் நான்கு நாடுகள் பங்கேற்கும் ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று இங்கிலாந்து தனது முதல் இன்னிங்சின் ஆட்டநேர இறுதியில் 3 விக்கெட் இழப்புக்கு 209 ரன் எடுத்துள்ளது.

லீட்சில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா முதல் இன்னிங்சில் 471 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

<<<<>>>>

தஜிகிஸ்தானில் நடைபெற்ற 23 வயதுக்கு உட்பட்டோருக்கான சர்வதேச நட்புணர்வு கால்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற இந்தியா – கிர்கிஸ்தான் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் கோல் எதுவுமின்றி டிரா ஆனது

<<<<>>>>

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் கோவை அணி 67 ரன் வித்தியாசத்தில் நெல்லை அணியை வென்றது.

இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் திண்டுக்கல் - சேலம் அணியையும், திருப்பூர் - மதுரை அணியையும் எதிர்கொள்கின்றன.

**<<<<The end>>>>**